මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **PRE/2024/100** **2024.09.20**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

### அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரிவோருக்கு, தேர்தல்களின் போது சம்பள அல்லது தனிப்பட்ட விடுமுறை இழப்பின்றி வாக்களிப்பதை இயலச் செய்யும் பொருட்டு விடுமுறை வழங்குதல்

வாக்களிப்பதை இயலச்செய்யும் பொருட்டு தொழில்புரிவோருக்கு விடுமுறை வழங்குவதற்கு தொழில்தருநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவில் (2023 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறு) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் 2024.09.21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலின் போதும் அது உரிய முறையில் அமுலாக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்கு முன்னர் இது சம்பந்தமாக ஊடகங்கள் வாயிலாக அனைத்து தொழில்தருநர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளபோதும், சில தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு உரிய முறையில் விடுமுறை வழங்கப்படுவதில்லையென தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதன்படி, இத்தேர்தலின் போது அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் தனியார் துறையிலும் பணிபுரிவோருக்கு (குறிப்பாக ஆடைத் தொழிற்சாலைகள், தனியார் வர்த்தக முயற்சிகள், தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ஹோட்டல் துறையில்) வாக்களிப்பதை இயலச் செய்யும் பொருட்டு தமது நிறுவனத்தில் தொழில்புரிவோருக்கு வாக்களிக்கச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் போதியளவில் விடுமுறை வழங்குமாறு அனைத்து தொழில்தருநர்களுக்கும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)